# முதியோரிடம் ஞானமுண்டு; ஆயுள் நீண்டோரிடம் அறிவுண்டு.

யோபு 12:12




இன்றைய இறைவார்த்தை:

எசேக்கியேல் 2: 2-5

திபா: 123: 1-4

2 கொரிந்தியர் 12: 7-10

மாற்: 6: 1-6

INTERNAL CIRCULATION ONLY
BUL 27/2024

அவர்களின் பாவங்களுக்கு கடவுள் கொடுத்த தண்டனை. இருப்பினும் அவர்கள் தங்கள் பாவ வாழ்க்கையைத் தொடர்ந்தனர். அவர்களுடைய மூதாதையரும் கடவுளுக்கு எதிராக கிளர்ந்தெழுந்து கலகம் செய்துள்ளனர், என்று எசேக்கியேலிடம் கடவுள் அறிவித்தார். இருந்தபோதும் எசேக்கியேலை ஒரு இறைவாக்கினராக அவர்கள் மத்தியில் கடவுள் அனுப்புகிறார். தங்களுடைய தேசத்தை மீண்டும் மறுசீரமைப்புக்கான எதிர்நோக்கு இருப்பதையும் , அவர்கள் ஒருநாள் தங்கள் தாய்நாட்டிற்கு திரும்புவார்கள் என்பதையும் அவர்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்று கடவுள் விரும்பினார். அதே போல் நாம் கேட்கிறோமா இல்லையோ, நம்முடைய எல்லாச் சூழ்நிலையிலும் கடவுள் நம்மைக் கைவிடமாட்டார்.

நாம் பலவீனமாக இருக்கும்போது தான் நான் வலிமையாக இருக்கிறேன் என்பது ஒரு முரண்பாடான கூற்று. பவுல் அடிகள் நமக்கு கூறவிருப்பது, நம்முடைய பலவீனமான நிலையில் தான் நாம் இயேசுவின் மீதும் அவருடைய இரக்கத்தின் மீதும் நம்பிக்கை வைக்கும்போது, நாம் வலிமை கொள்கிறோம். நம்முடைய சொந்த வலிமையினால அல்ல, ஆனால் நம்மில் வீற்றிருக்கும் கிறிஸ்துவின் அருளில் நம்பிக்கைக் கொள்ளும்போது, நாம் வலிமை கொள்கிறோம்.

அதே போலத்தான் நம் சமூகத்தில் உள்ளவர்களை நாம் பாராட்டாமல் இருக்கிறோம். நாம் சந்திக்கும் அருள்பணியாளர்கள், பேச்சாளர்கள் அவர்களின் பணி ஆகியவற்றைப் பாராட்டும் நாம் நம்முடைய சொந்த குடும்பம் அல்லது சமூகத்தில் உள்ளவர்கள் செய்யும் பல நல்ல காரியங்களைக் காணத் தவறிவிடுகிறோம். நற்செய்தியிலும் இயேசுவின் சொந்த ஊரில் உள்ள மக்கள் “இவர் “நம்முடைய ஊரின் சாதாரண இளைஞன்” தானே என்று அவரை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். அவர் செய்த அருளடையாளங்களைப் பற்றிக் கேள்விப்பட்ட பின்னும் அவர்களால் நம்பமுடியவில்லை. அவர் சொல்வதைக் கேட்டும் அவர்களால் நம்பமுடியவில்லை. இந்த ஞானம் அவருக்கு எப்படி வந்தது? நம்மையயே நாம் உற்றுநோக்குவோம்.

அவர்களுடைய நம்பிக்கையின்மையைக் கண்டு அவர் வியந்துபோனார். இதனால், அவரால் அங்கு எந்த அருளடையாளங்களும் செய்யமுடியவில்லை. இருப்பினும் அவர் சில நோயாளர்களைக் குணப்படுத்தினார் என்பது வேடிக்கையாக உள்ளது. அவருக்கே அவர் உதவமுடியாமல் போயிற்று. ஆண்டவர் மீது நாம் வைத்திருக்கும் நம்பிக்கையை நாம் கேள்விக்குள்ளாக்குகிறோம். அவர் மீது நமக்குப் போதிய நம்பிக்கை உள்ளதா? நம்முடைய பலவீனத்தில் அவரது அருளைப் பெற்று வலிமையாக இருக்க, நம்மை நாமே அனுமதிக்கின்றோமா? நம்முடைய நம்பிக்கையின் அளவு எவ்வளவாக இருந்தாலும் (மத்தேயு 17:20) இயேசு நம்மைக் கைவிடமாட்டார் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org

NEW WAY OF BEING CHURCH
newbec

7 ஜூலை 2024
பொதுக்காலம் ஆண்டின் 14 ஆம் ஞாயிறு

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள்

முதியோர் மற்றும் நோயுற்றோரை அக்கறையுடன் பராமரித்தல்

# பலவீனம் ஆனால் வலிமை

இந்த மாதம் தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோர்களுக்கான உலக தினத்தைக் கொண்டாடுகிறோம். முதியோர் மற்றும் நோயுற்றோருக்கான மேய்ப்புப்பணி பராமரிப்பை நாம் கவனத்தில் கொள்வோம்.

இன்றைய முதல் வாசகத்தில் பாபிலோனில் நாடு கடத்தப்பட்ட மக்களுக்கு இறைவாக்கு உரைக்க எசேக்கியேல் கடவுளால் அனுப்பப்படுகிறார். அப்போது பாபிலோனியர்கள் யெருசலேமைக் கைப்பற்றியபோது பத்தாயிரம் யூதர்கள் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டார்கள். இது

